### இந்தியாவிலேயே முதன் முறையாக

# கோவை கங்கா மருத்துவமனையில் ஏர் ஆம்புலன்ஸ் சேவை தொடக்கம்!

## டாக்டர் சண்முகநாதன் பேட்டி!!

கோவை,ஜூன்.25

இந்தியாவிலேயே முதன்முறையாக கோவை கங்காமருத்துவமனை சார்பில் ஏர் ஆம்புலன்ஸ் சேவை தொடங்கப்பட்டுள்ளது. இதற்கான ஹெலிபேட் துடியலூர் வட்டமலைப்பாளையத்தில் உள்ள கங்கா நர்சிங் கல்லூரி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய திட்டம் குறித்து கங்கா மருத்துவமனை தலைவர் டாக்டர் சண்முகநாதன், இயக்குனர்கள் டாக்டர்கள் ராஜசபாபதி,ராஜசேகரன் ஆகியோர் செய்தியாளர்களிடம் கூறியதாவது;

இந்தியாவிலேயே முதல் முறையாக கோவை கங்காமருத்துவமனை சார்பில் ஏர் ஆம்புலன்ஸ் சேவை தொடங்கப்பட்டுள்ளது.

கங்கா மருத்துவமனை மட்டுமின்றி அனைத்து மருத்துவமனைகளும் இந்த ஏர் ஆம்புலன்ஸ் சேவையை பயன்படுத்திக் கொள்ளலாம். இதற்காக நவீன மருத்துவ உபகரணங்களுடன் உருவாக்கப்பட்டுள்ள ஹெலிகாப்டர் மூலம் பெங்களூரு, சென்னை, திருவனந்தபுரம் உள்பட 500 கி.மீ தூரத்திற்கு இடை விடாமல் பறக்க முடியும்.

எரிபொருள் நிரப்ப இடையில் தரையில் இறங்க வேண்டிய அவசியம் இல்லை. இந்த ஹெலிகாப்டர் அகுஸ்தா 199 ரகத்தை சேர்ந்தது. இத்தாலி நாட்டில் தயாரிக்கப்பட்டது. இதில், 2 பைலட்,ஒரு மருத்துவர், நோயாளி, அவரது உறவினர் என 5 பேர் பயணிக்க முடியும். இதில், அவசர சிகிச்சைக்கு தேவையான ஆக்ஸிஜன் சிலிண்டர்,

வென்டிலேட்டர், இதய துடிப்பை சீராக வைக்கும் கருவி உள்ளிட்ட அனைத்து மருத்துவ கருவிகளும் உள்ளது.

சாலை மார்க்கமாக நீண்ட தூரம் பயணித்து, மருத்துவமனையை அடையாமல், மிக குறுகிய நேரத்தில் இந் ஏர் ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனையை அடைய முடியும். இதன் மூலம் அபாயகட்டத்தில் இருந்து நோயாளியை காப்பாற்ற முடியும். நோயாளிகள் மட்டுமின்றி அவசர அறுவை சிகிச்சைக்காக உடல் உறுப்புகளான இதயம், கல்லீரல், கிட்னி, கண் போன்றவற்றையும் இந்த ஏர் ஆம்புலன்ஸ் மூலம் கொண்டு செல்ல முடியும். விமான போக்குவரத்து துறையின் அனுமதியுடன் இந்த ஏர் ஆம்புலன்ஸ்சேவை தொடங்கப்பட்டுள்ளது. இப்புதிய மருத்துவசேவைதொடக்க விழா இன்று (ஞாயிற்றுக்கிழமை)மாலை4மணிக்கு நடக்கிறது. இந்திய விமானப்படை தளபதி ஏர் மார்ஷல் தனோவா துவக்கி வைக்கிறார். வருமான வரித்துறை கமிஷனர் ஸ்ரீவத்சவா, ஏர்மார்ஷல் அனில் பெகல், கோவை மாவட்ட கலெக்டர் ஹரிஹரன், மாநகர போலீஸ் கமிஷனர் ஏ.அமல்ராஜ், மேற்கு மண்டல ஐஜி பாரி,, முதன்மை கேப்டன், பட்டாச்சாரியா, கேப்டன் நவீன் மற்றும் காயத்ரி அனந்தராமன் உள்பட பலர் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

---

இல் 144 ஆசனமும், 3 வது மணி நேரத்தில் 152 ஆசனமும், 4 வது மணி நேரத்தில் 154 ஆசனமும், 5 வது மணி நேரத்தில் 171 ஆசனமும் என மொத்தம் 5 மணி நேரத்தில் தனிநபர் பெண்கள் பிரிவில் (மைனர்) 772 ஆசனங்களைச் செய்து புதிய எலைட் உலக சாதனையை நிகழ்த்தியுள்ளார்.



இந்த உலக சாதனை நிகழ்ச்சிக்கு எலைட் உலக சாதனை நிறுவனத்தின் இந்திய ஆய்வு அதிகாரி கார்த்திகேயன் ஜவஹர் நடுவராக இருந்து இந்த சாதனையை அங்கீகாரம் செய்து சான்றிதழும், பதக்கமும் வழங்கி கௌரவித்தார். இந்நிகழ்ச்சியில் பள்ளியின் சேர்மன் ஞானசம்பந்தம், தாளாளர் கார்த்திகேயன், வி.ஆர்.ஜி அறக்கட்டளை தலைவர் மரகதம், பள்ளி முதல்வர் ஜெயந்தி மற்றும் பொதுமக்கள் ஆகியோர் மாணவிக்கு வாழ்த்துக்களை தெரிவித்தனர்.


The Chairman and Staff of Ganga Hospital, Coimbatore welcome you to the

LAUNCH OF

GAA

GANGA AIR AMBULANCE

Date : 25-06-2017 Time : 4.00 pm

Venue : Ganga Helipad, Ganga Institute of Health Sciences Premises, Vattamalaipalayam, Coimbatore.

by

**Air Chief Marshal B.S. Dhanoa**, PVSM, AVSM, YSM, VM, ADC
Chief of Air Staff, Indian Air Force

**Shri. S.K. Srivastava, I.R.S**
Commissioner of Income Tax, Noida

Presides

Felicitations offered by

**Air Marshal Dr. Anil Behl**, AVSM, PHS
Director General Medical Services (Air) - Retd.

**Thiru. T.N. Hariharan, I.A.S**
District Collector, Coimbatore

**Thiru. A. Amalraj, I.P.S**
Commissioner of Police, Coimbatore City

**Thiru. A. Pari, I.P.S**
Inspector General of Police, West Zone, Coimbatore

Dr. J.G. Shanmuganathan
Chairman, Ganga Hospital

Mrs.Kanakavalli Shanmuganathan
Managing Director, Ganga Hospital